**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, பத்மநாபபுரம்**

**முன்னிலை திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,

**2026** ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆம் நாள் **செவ்வாய் கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம் வைகாசி திங்கள் 26-ம் நாள்

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.227/2021**

**CNR.No.TNKK090123972021**

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>கொற்றிக்கோடு காவல் நிலையம்,<br>குற்ற எண்.118/2021 | ................ குற்றமுறையீட்டாளர், |
| **/எதிர்/** | |
| அஜிதா (வயது 48),<br>க/பெ. கிருஷ்ணன்குட்டி,<br>கடையாலுமூடு புத்தன்வீடு,<br>வழிகலாம்பாடு,<br>செம்பருத்திவிளை. | ................... 1 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| தனலெட்சுமி(வயது 26),<br>க/பெ. சிவன்,<br>கடையாலுமூடு புத்தன்வீடு,<br>வழிகலாம்பாடு,<br>செம்பருத்திவிளை. | .................. 2 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

## CASE SUMMARY

| **Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019** | | | |
|---|---|---|---|
| 1. | Case Number | | Calendar Case (CC) No.227 of 2021 |
| 2. | Name of the Police Station | | State of Tamilnadu, |

| | | | |
|---|---|---|---|
| | and Crime Number | | Represented by its<br>Sub Inspector of Police,<br>Kotticode Police Station,<br>Kotticode. (Cr.No.118/2021).<br>…..Complainant |
| 3. | Name of the Accused person | Description of the Accused | A1- Ajitha<br>A2 – Thanalakshmi |
| 4. | Father's/Husband's Name | | A1 Wife of Krishnankutty<br>A2 Wife of Sivan |
| 5. | Occupation | | A1 and A2 House wife |
| 6. | Residence of the Accused | | A1 and A2 – Kadayalumoodu, puthanveedu, Valikalampad AD, Chemparuthivilai |
| 7. | Age and Gender | | A1 – 48/2021, Female.<br>A2 – 26/20121, Female. |
| 8. | Date of Occurrence | Date of | 29.06.2021 at 11.00 hours |
| 9. | Date of Information to the Police | | 29.06.2021 at 18.30 hrs |
| 10. | Apprehension | | Anticipatory Bail |
| 11. | Release on Bail | | |
| 12. | Period of remand of the accused | | -- |
| 13. | Filing of complaint/final report in the Court | Date of | 15.12.2021 |
| 14. | Committal of the case to the Court of Sessions | | Nil |
| 15. | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 23.03.2022 |
| 16. | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 16.03.2022 |
| 17. | Examination in Chief and Cross examination of a | | Witness \| Chief Examination \| Cross Examination |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | witness | | P.W.1 | 22.07.2022 | 22.07.2022 |
| | | | P.W.2 | 22.07.2022 | 22.07.2022 |
| | | | P.W.3 | 22.07.2022 | 22.07.2022 |
| | | | P.W.4 | 06.10.2022 | 06.10.2022 |
| | | | P.W.5 | 06.10.2022 | 06.10.2022 |
| | | | P.W.6 | 06.10.2022 | 06.10.2022 |
| | | | P.W.7 | 14.08.2023 | 14.08.2023 |
| | | | P.W.8 | 14.08.2023 | 14.08.2023 |
| | | | P.W.9 | 06.02.2026 | 06.02.2026 |
| 18. | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 12.02.2026 | | |
| 19. | Closure of Trial | | 12.02.2026 | | |
| 20. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | - | - |
| 21. | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22. | Sentence or Order | | முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 23. | Service of copy of judgment | | Copy of the judgment will be uploaded in | | |

| | | | |
|---|---|---|---|
| | of findings on accused | | CIS and made available for viewing in e-courts services portal. |
| 24. | Explanation of delay | | - |
| 25. | Details of victim compensation ordered | | Nil |
| 26. | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition / Crl.M.P.No / Result<br>U/s 301 of Cr.P.C / 8437/2022 / Allowed on 07.09.2022<br>Surrender petition / 4905/2021 / Allowed on 12.07.2021 |

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>கொற்றிக்கோடு காவல் நிலையம்,<br>குற்ற எண்.118/2021 | ................ குற்றமுறையீட்டாளர், |
| **/எதிர்/** | |
| அஜிதா (வயது 48),<br>க/பெ. கிருஷ்ணன்குட்டி,<br>கடையாலுமூடு புத்தன்வீடு,<br>வழிகலாம்பாடு,<br>செம்பருத்திவிளை. | ................... 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| தனலெட்சுமி(வயது 26),<br>க/பெ. சிவன்,<br>கடையாலுமூடு புத்தன்வீடு,<br>வழிகலாம்பாடு,<br>செம்பருத்திவிளை. | .................. 2 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு 15.12.2021 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 03.06.2026 இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை

உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.விஜயகுமார்., அவர்கள் ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் ஆராய்ந்தும் இன்று 09.06.2026 ஆம் தேதி நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVII ன் கீழ் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. இவ்வழக்கானது கொற்றிக்கோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 294(பி), 325, 506(i) ஆகிய பிரிவின் கீழ் குற்ற எண்.118/2021-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

2. **அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்** :-

இவ்வழக்கில் கடந்த 29.06.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு புகார்தாரர் மகேஷ்வரி என்பவர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு லோன் மூலம் ரூ.40,000/- கடன் வாங்கி கொடுத்திருந்ததை திரும்ப கேட்கும்போது முன் பகை காரணமாக புகார்தாரரின் குழந்தை படிக்கும் பள்ளியிலிருந்து பிள்ளைகளுக்கான உணவு பொருட்களை புகார்தாரர் வாங்கி வரும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் வீட்டின் அருகே வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் புகார்தாரரை தடுத்துநிறுத்தி, புண்டாமவளே என கெட்டவார்த்தை பேசி, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை இறுக்கிபிடிக்கவே, 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின் இரண்டு காதையும் கம்மலையும் கையால் புடுங்கி இழுத்து, இடது காது கிழிந்து ரத்தம் கொட்டியும், 2-ம் குற்றம்

சுமத்தப்பட்ட நபர் காலால் வயிற்றில் மிதித்தும் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கல்லால் புகார்தாரரின் கன்னத்தில் இடித்து வீக்க காயம் ஏற்படுத்தியது குறித்தும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பிளாஸ்டிக் பைப்பால் புகார்தாரரை பல இடங்களில் அடித்து கை உட்பட பல இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்படுத்தியது குறித்தும், பைப்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியது குறித்தும் குறிப்பிட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **குவிமுச 1973 பிரிவு 207 ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்** :-

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலை - யானவுடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. **கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இ.த.ச.1860 பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழும் தனித்தனியே குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

**5.** வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை கு.வி.மு.ச **1973 பிரிவு 240(2)-ன்** படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் இல்லை எனவும், வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பம் எனகூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**6. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>**

அரசுத்தரப்பில் அ.சா.1 லதா, அ.சா.2 சரஸ்வதி, அ.சா.3 சிவகுமாரி, அ.சா.4 மகேஷ்வரி, அ.சா.5 ஜோதி, அ.சா.6 விஜயகுமார், அ.சா.7 பிரதீப் குமார், அ.சா.8 வல்சலம் (உதவி ஆய்வாளர்), அ.சா.9 கதிரேசன்( உதவி ஆய்வாளர் - ஓய்வு) ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்</u>**

கடந்த 29.06.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு புகார்தாரர் மகேஷ்வரி என்பவரை குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் தடுத்துநிறுத்தி, புண்டாமவளே என கெட்டவார்த்தை பேசி, 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின் இரண்டு காதையும் கம்மலையும் கையால் புடுங்கி இழுத்து, இடது காது கிழிந்து ரத்தம் கொட்டியும், 2-ம் குற்றம்

சுமத்தப்பட்ட நபர் காலால் வயிற்றில் மிதித்து, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கல்லால் புகார்தாரரின் கன்னத்தில் இடித்து வீக்க காயம் ஏற்படுத்தியும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பிளாஸ்டிக் பைப்பால் புகார்தாரரை பல இடங்களில் அடித்து கை உட்பட பல இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்படுத்தி, பைப்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**8.** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், கண்ணுற்ற சாட்சிகளான **அ.சா.1 லதா மற்றும் அ.சா.2 சரஸ்வதி, அ.சா.3 சிவகுமா**ர் ஆகியோர்களது சாட்சியங்களில் சம்பவம் பற்றியும், நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.4 மகேஷ்வரி** என்பவரின் சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் , புகார் மனு அளித்தது பற்றியும், பார்வை மகஜர் சாட்சிகளான **அ.சா.5 ஜோதி மற்றும் அ.சா.6 விஜயகுமார்** ஆகியோர்களின் சாட்சியங்களில், பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தது பற்றியும், மருத்துவர் **அ.சா.7 பிரதீப்குமார்** என்பவரின் சாட்சியத்தில் அ.சா.4-க்கு சிகிச்சை அளித்தது பற்றியும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும், **அ.சா.ஆ.3** விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கியது பற்றியும் **அ.சா.8 வல்சலம் (உதவி ஆய்வாளர்)** என்பவரின்

சாட்சியத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர் ஜார்ஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடந்த 29.06.2021-ம் தேதி 11.30 மணிக்கு அ.சா.4 மகேஷ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.1** புகார் மனுவைப் பெற்று கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.318/2021, ச/பி.294(பி), 323 மற்றும் 506(1) இதச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, 29.06.2021-ம் தேதி அ.சா.8-யிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை விசாரணை எடுத்துக்கொண்டு, 30.06.2021-ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.5** மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மேற்படி வழக்கு கோப்பை அ.சா.9 கதிரேசன் என்பவர் 13.08.2021-ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கெண்டு, இவ்வழக்கில் காயம்பட்ட நபரான மகேஷ்வரி என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. பிரதீப் என்பவரை 13.08.2021-ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், புலன்விசாரணையை முடித்து, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்பிரிவு மாற்றம் செய்து, இதச பிரிவுகள் 294(பி), 325, 506(1)-ன் கீழ் **அ.சா.ஆ.6** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்து மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல்</u> :-**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து 1, 2 குற்றம்

சுமத்தப்பட்ட நபர்களிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவியபோது 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் பதில் அளித்தார்கள்.

**10. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.</u>**

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு அதனடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**11.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

**12.** அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13.** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கடன் வாங்கி பணத்தை திருப்பி கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டதாகவும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் வீட்டின் முன்பு அடி பைப்பிற்கும் வீட்டிற்குமிடையே சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளநிலையில் மாதிரி வரைபடத்தில்

சம்பவ இடத்தை சரியாக காட்டவில்லை எனவும், கத்தியை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக புகார்தாரர் மனுவில் குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் அதை அடித்து திருத்தம் செய்யப்பட்டு, கத்தியை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக முரண்பட்டு கூறியிருப்பதாகவும், மேலும், புகார்தாரர் தன் மகள் படிக்கும் பள்ளியிலிருந்து அரிசி மற்றும் பருப்பு வாங்கி வரும் போது பிரச்சனை ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையில் சம்பவ இடத்தில் அரிசி மற்றும் பருப்பு சிதறி கிடந்ததாக தடயங்கள் எதுவும் இல்லை எனவும், புகார்மனுவில் கல்லால் அடித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் மருத்துவமனையில் விசாரித்தபோது கல்லால் அடித்ததாக புகார்தாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், அ.சா.1 ஐ தவிர மற்ற சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக சாட்சியம் அளித்திருப்பதாகவும், அ.சா.1 ஐ ஒத்து பிற சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை எனவும், அ.சா.1-ன் சாட்சியம் நம்ப தக்கதாக இல்லை என்றும், அ.சா.1-ன் சாட்சியத்தை நம்பும் வகையில் ஒத்தேற்பு சாட்சியங்கள் தேவை என்றும், வடிவேல்தேவர் வழக்கின் முன்தீர்ப்பை சுட்டி காட்டியும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன்**

**கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**15. <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழான குற்றச்சாட்டு குறித்த விவாதம்.</u>**

a) கடந்த 29.06.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு புகார்தாரரை தடுத்து நிறுத்தி, கெட்டவார்த்தை பேசி, காயங்கள் ஏற்படுத்தியதாகவும், பைப்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே கடந்த 29.06.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு புகார்தாரரை தடுத்துநிறுத்தி, கெட்டவார்த்தை பேசி, காயங்கள் ஏற்படுத்தியதாகவும், பைப்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லிய சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் புகார்தாரரை தடுத்து நிறுத்தி, கெட்டவார்த்தை பேசி, காயம் ஏற்படுத்தி, கொலை**

**மிரட்டல் விடுத்து, மரண பயத்தை ஏற்படுத்தினார்களா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

c) இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் அ.சா.ஆ.1 புகார் மனுவை ஒத்துரைக்கும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணான வகையில் சாட்சியமளித்துள்ளார்கள்.

d) மேலும், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.4 தனது சாட்சியத்தில், **"1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அஜிதா அப்போது அங்கிருந்த பிளாஸ்டிக் பைப்பை எடுத்து வலது கை முழங்கையிலும், இடது கண் நெற்றி அருகிலும், வலது தொடையிலும் அடித்து இரத்த காயத்தை உண்டுபண்ணினார்"** என்று சாட்சியமளித்துள்ளர். ஆனால் அ.சா.4 தனது குறுக்குவிசாரணையில், **"இரும்பு அடி பைப்பாலும், பிளாஸ்டிக் பைப்பாலும், கையாலும் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், மருத்துவரிடமும் இரும்பு அடி பைப்பாலும், பிளாஸ்டிக் பைப்பாலும், கையாலும் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் மேலும், போலீசாரிடம் புகார் கொடுத்தபோது புகாரில் கையாலும், பிளாஸ்டிக் பைப்பாலும், கல்லாலும் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், இரும்பு பைப்பாலும் அடித்ததாக போலீசாரிடம் சொல்லியுள்ளேன்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

e) மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்தபோது அ.சா.1 தனது புகார் மனுவில் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கல் மற்றும் பிளாஸ்டிக் பைப்பால் மட்டுமே அடித்ததாக கூறிவிட்டு, தனது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இரும்பு அடி பைப், கல், பிளாஸ்டிக் பைப் மற்றும் கையால் காயப்படுத்தியதாக புகாரில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கு முரண்பட்டவகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மேற்படி சம்பவ இடத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பயன்படுத்தியதாக சொல்லும் கல், பிளாஸ்டிக் பைப் மற்றும் இரும்பு அடி பைப் போன்ற ஆயுதங்கள் எதுவும் வழக்கில் வழக்கு சொத்துக்களாக கைப்பற்றப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேற்படி சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் ஆயுதங்கள் குறித்து அ.சா.4 முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் இருப்தாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

f) மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், தன்னை தனது மாமியார் சரஸ்வதி தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் சிவன் என்பவர் புகார்தாரரை மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ளநிலையில் அ.சா.ஆ 3 விபத்து பதிவேட்டிற்கு முரண்பட்ட வகையில் அ.சா.1 சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பில்

சொல்லப்பட்டவாறு சம்பவம் நடைபெற்றதா என்பது குறித்து சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

g) மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில் **"புகார் மனுவில் முதலில் கத்தியை காட்டி எழுதிவிட்டு பைப்பை காட்டி என்ற வார்த்தை அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். "** என்று சாட்சியமளித்துள்ளார். உண்மையாகவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கத்தியை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்களா அல்லது பைப்பை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்களா என்பதும், பைப் என்பது இரும்பு பைப்பா அல்லது பிளாஸ்டிக் பைப்பா என்பது குறித்தும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

h) மேலும், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.4 தனது சாட்சியத்தில், எதிரிக்கு 40,000/- பணம் கொடுத்தற்கான ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது, போலீசாரிடம் பணம் கொடுத்ததற்கான ஆவணத்தை ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், புகார்தாரர் எதிரிக்கு பணம் ரூ.40,000/- கொடுத்தற்கான ஆவணம் எதுவும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், எதிரியின் வீட்டிற்கு முன்பு சம்பவம் நடந்துள்ளதாக வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளநிலையிலும், சம்பவமானது எதிரியின் வீட்டிற்கு முன்பும், அடிப்பைப்பிற்கு முன்பும் நடைபெற்றது என்று அ.சா.4 சாட்சியமளித்துள்ளநிலையிலும், மாதிரி வரைபடத்தில் எதிரியின் வீட்டிற்கு முன்பு சம்பவம் நடந்ததாகவோ, எதிரியின்

வீட்டிற்கும், அடிபைப்பிற்கும் இடைப்பட்ட இடத்தில் சம்பவம் நடந்ததாகவோ குறிப்பிட்டு காட்டப்படாதது குறித்து அரசுதரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

i) மேலும், சம்பவ இடம் குறித்து புலன்விசாரணை அதிகாரி அ.சா.8 தனது சாட்சியத்தில், **"எதிரியின் வீட்டின் முன்புள்ள அடி பைப்பு அருகில் சம்பவம் நடைபெற்றதாக உங்களுடைய விசாரணையில் சாட்சி சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்கள். புகாரிலும் எதிரியின் வீட்டின் முன்பு தான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார்கள். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் அடி பம்பு அருகே எதிரியின் வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான்".** என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததலிருந்தும் சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று சம்பவ இடத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

j) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி எண்.8 வழக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மேலும், இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்றதாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 தனது சாட்சியத்தில் வலிகிலாம்பாடியிலுள்ள ஜங்சன்

பக்கத்திலுள்ள கடையில் வைத்து கையொப்பம் செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

k) மேலும், அ.சா.4-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப்குமார் என்பவர் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், மகேஷ்வரி என்பவரை அவரது சகோதரர் சிவன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்ததாகவும், அவரை விசாரித்தபோது இரண்டு தெரிந்த நபர்கள் பி.வி.சி பைப்பை வைத்து தாக்கியதாகவும் தன்னிடம் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.4 தனது புகார் மனுவிலும், சாட்சியத்திலும் தன்னை தனது மாமியார் சரஸ்வதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக குறிப்பிட்டு, அ.சா.ஆ.3 விபத்து பதிவேட்டிற்கும், அ.சா.7-ன் சாட்சியத்திற்கும் முரண்பட்ட வகையில் அ.சா.4 சாட்சியமளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா.4 ஐ குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பது ஆயுதத்தை குறித்து அ.சா.4 புகார் மனுவில் சொல்லியுள்ள விபரங்களுக்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

l) மேலும், அ.சா.4 தனது புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் "புண்டாமவளே" என்ற கெட்ட வார்த்தையில் பேசி அருவருப்பும் ஏற்படுத்தியதாக கூறிவிட்டு தனது சாட்சியத்தில் **" சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என்னை தனலெட்சுமி அப்பா கிருஷ்ணன் குட்டி என்பவர் என்னை**

**அசிங்கமாக பேசினார்"** என்று மட்டுமே கூறியுள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகாரில் கூறியது போல் அசிங்கமான வார்த்தையில் பேசி அருவருப்பு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. பைப்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மிரட்டியதாக புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு சாட்சியத்தில், **"1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அஜிதா பிளாஸ்டிக் பைப்பை எடுத்து என்னை துரத்தினார்கள்"** என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

m) மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 திரு.வல்சலம் மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 திரு.கதிரேசன் ஆகியோர்களின் சாட்சியங்களை மட்டும் வைத்து அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்து இருப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

n) மேலும் இவ்வழக்கில் எந்த பட்டியல் சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறாக அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு இ.த.ச. பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழ் சம்பவம் நடந்ததா என்பது குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி வழக்கை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

o) மேலும் அ.சா.ஆ.1 புகார் மனுவினை ஒத்துரைக்கும் வகையில் எந்தொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

p) மேலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1-ஐ தடுத்து நிறுத்தியதாவோ, அவரை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி தொல்லை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.1 ஐ இரும்பு அடி பைப், கல் மற்றும் பிளாஸ்டிக் பைப்பால் அடித்து காயப்படுத்தியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்து அதனால் அ.சா.1-க்கு உயிர் பயத்தை ஏற்படுத்தியதாகவோ குறிப்பிட்டு அரசு தரப்பில் எந்த ஒரு தனிநபர் சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை.

**16.** மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விதம், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை அடையாளம் காட்டப்படாமை, சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது குற்றம் சுமத்தப்பட்ட

நபர்களுக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**17. <u>தீர்வு</u> :-**

முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(பி), 325 மற்றும் 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**18. <u>கு.வி.முச 1973 பிரிவு 452-ன் கீழ் உத்தரவு:-</u>**

மேலும், இவ்வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்த உத்தரவு எதுவும் கு.வி.முச 1973 பிரிவு 452-ன் கீழ் பிறப்பிக்கப்படவில்லை.

**19. <u>வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் உத்தரவு</u> :-**

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது தீர்ப்புரை தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு

நடைமுறையில் இருக்கும் என்றும், பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று (09.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/-திருமதி.V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | லதா | 22.07.2022 | - |
| அ.சா.2 | சரஸ்வதி | 22.07.2022 | - |
| அ.சா.3 | சிவகுமார் | 22.07.222 | - |
| அ.சா.4 | மகேஷ்வரி | 06.10.2022 | அ.சா.ஆ.1 |
| அ.சா.5 | ஜோதி | 06.10.2022 | அ.சா.ஆ.2 |
| அ.சா.6 | விஜயகுமார் | 06.10.2022 | - |
| அ.சா.7 | பிரதீப்குமார் (மருத்துவர் | 14.08.2023 | அ.சா.ஆ.3 |
| அ.சா.8 | வல்சலம் (உதவி ஆய்வாளர்) | 14.08.2023 | அ.சா.ஆ.4 |
| அ.சா.9 | கதிரேசன் (உதவி ஆய்வாளர்) | 06.02.2026 | அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 29.06.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.2/அ.சா.6 | 30.06.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3/அ.சா.6 | 29.06.2021 | விபத்து பதிவேட்டு காயச்சான்று |
| அ.சா.ஆ.4/ அ.சா.6 | 29.06.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.6 | 30.06.2021 | மாதிரி வரைபடம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6/அ.சா.9 | 13.08.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில், சாட்சி , சான்றாவணங்கள்** : இல்லை

**குறிப்பு :-**

1. வழக்கு விசாரணை காலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பிணையில் சென்றுள்ளார்கள்.
2. எந்தவொரு அரசு தரப்பு சாட்சியமும் 3 நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒம்/-திருமதி.V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

Judicial Magistrate Court No.1,
Padmanabhapuram.

Court Seal.

“ The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’’.